# இராஜதந்திர தூதரக உத்தியோகபூர்வ இல்லத்தின் ஊழியர் வெற்றிடம்

## வீட்டுப்பணிப்பாளர்/ஆடை சலவையாளர் [ஆண்/பெண்]

எமது உத்தியோகபூர்வ வதிவிட காரியாலய குழுவின் வீட்டு நிர்வாகம்/ஆடை சலவை செய்யும் பதவி நிலைக்கென பயிற்சிப் பெற்ற பொறுப்புவாய்ந்த நபர்கள் தேவைப்படுகின்றார்கள். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் பொது வீட்டு நிர்வாகம் மற்றும் ஆடை சலவைப் பணிகளை மேற்கொள்வதுடன் சுத்தமாக வைத்திருப்பதை மிகவும் உயர்ந்த மட்டத்தில் பேணுவதற்கும் பொறுப்புடன் செயற்படுவதில் கவனம் செலுத்த வேண்டும்.

**அடிப்படை பொறுப்புக்கள்:**

- பூங்கா பராமரிப்பாளர்களினால் சுத்தம் செய்யப்படாத வெளியிடங்கள் மற்றும் வீட்டு வளாகத்தை சுத்தப்படுத்தல் உள்ளிட்ட அனைத்து பொதுவான வீட்டு நிர்வாகப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.
- ஊழியர்களுக்குரிய ஆடைகளை சலவை செய்தல், இஸ்திரி போடுதல் மற்றும் பாதுகாப்பாக வைத்திருத்தல் உள்ளிட்ட அனைத்து பணிகளையும் நிர்வகிக்க வேண்டும்.
- வீட்டின் தேவைகளை பூர்த்தி செய்வதுடன் தேவையான பணிகளுக்கென ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும்.
- ஊழியர்களின் அல்லது ஊழியரினால் நியமிக்கப்படும் அதிகாரம்பெற்ற பிரதிநிதியின் கண்காணிப்பின் கீழ் பணிகளை உரிய முறையில் மேற்கொள்ள வேண்டும்.

**சேவைக் காலம்:**

- வாரத்திற்கு 50 மணித்தியாலங்கள் - முழு நேரம்

**மாதாந்த ஊதியம்:**

- ரூ. 112,984.87

**தேவைப்படும் தகுதிகள்:**

- க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் தோற்றியிருத்தல் அல்லது அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருத்தல்.
- வீட்டு நிர்வாகம் அல்லது ஆடை சலவை செய்யும் சேவையில் குறைந்தபட்சம் 2 வருடங்கள் அனுபவம் (விருந்தோம்பல் துறையில் அனுபவம் விரும்பத்தக்கது)
- சிறிய விடயங்கள் தொடர்பிலும் உரிய அதவானத்தை செலுத்துதல், பல்துறை சார்ந்த திறன்கள் மற்றும் தொழிலின் தேவைக்கமைய பணியாற்றுவதற்கான நெகிழ்வுத்தன்மை.
- எப்பொழுதும் தொழில்சார் மதிப்பு, ஒழுக்க விழுமியங்கள் மற்றும் நேர்மையுடன் செயற்படுதல்.
- ஆடை சலவைப் பொருட்கள், சுத்தப்படுத்தல் மற்றும் ஆடை சலவைக்கான உபகரணங்களை பயன்படுத்தும் பூரண அறிவு.
- செல்லப்பிராணிகளுடன் (நாய், பூனை போன்றவை) அசௌகரியமின்றி பழகுதல்.
- ஆங்கில மொழி உட்பட சிங்களம் மற்றும்/அல்லது தமிழ் மொழியில் சரளமாக உரையாடும் ஆற்றல்.

**(உத்தியோகபூர்வ இல்லத்தின் காரியாலய குழுக்களில் ஒருவராக கடமையாற்றும் வீட்டுப் பணியாளர்கள் தூதரக காரியாலயத்தின் சேவையாளராக கருதப்படமாட்டார்கள் என்பதுடன், அவர்கள் சேவையாற்றும் வீட்டின் உரிமையாளரின் சேவையாளர்கள் என்பதை கவனத்திற்கொள்ளுங்கள்.)**

**விண்ணப்பித்தலுக்கான ஆலோசனைகள்:**

இந்த பதவி நிலைக்கென ஆர்வமுள்ளவர்கள் கீழுள்ள விபரங்களுடன் கூடிய சுயவிபரக் கோவையை (CV) மின்னஞ்சல் ஊடாக அனுப்ப வேண்டும்.

1. முழுப் பெயர்
2. தற்போதுள்ள முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம்
3. நீங்கள் 18 – 60 வயதிற்கிடைப்பட்டவரா? (ஆம்/இல்லை)
4. நீங்கள் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையை பூர்த்தி செய்து அல்லது அதற்கு முயற்சித்துள்ளீர்களா? அவ்வாறாயின் விபரங்களை குறிப்பிடுங்கள்.
5. இதனை ஒத்த பதவி நிலையில் குறைந்தபட்சம் 2 வருடங்கள் அனுபவம் உள்ளதா? ஆம் எனின், குறித்த இடத்தின் பெயர், சேவைக்காலம், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விபரங்கள்.
6. உங்களின் தற்போதைய/கடந்த மாதத்தின் மொத்த சம்பளம்

**விண்ணப்பித்தலுக்கான ஆலோசனைகள்:**

உங்கள் விண்ணப்பத்தை அண்மையில் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையுடன் **"ColomboERA@state.gov"** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள். இந்த மின்னஞ்சலின் விடயதானத்தில் **வீட்டுப்பணிப்பாளர்/ஆடை சலவையாளர்** என குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**உங்கள் விண்ணப்பங்கள் 2025 ஆகஸ்ட் 03 அல்லது அதற்கு முன்னராக கிடைக்கப் பெற வேண்டும்.**

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரம் தொடர்புகொள்ளப்படுவார்கள்.